**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், செய்யூர்</u>**

**<u>அசல் வழக்கு எண்.19/2020</u>**

**<u>(DW3)</u>**

| | | |
|---|---|---|
| **பெயர்.திருமதி.ஷீலாதேவி** | க/பெ.தயாளன் | நாள் **20.03.2025** |

**<u>பி.வா.சா.3 சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

வாதி என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கினை தாக்கல்செய்துள்ளார் என்று எனக்கு தெரியும். இந்த வழக்கில் நான் 5வது பிரதிவாதி. 1வது வாதி சொந்த ஊர் எனக்கு தெரியாது. தாவா சொத்து விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் அதை நான் 1வது வாதிக்கு விற்பனை செய்தேன். தாவா சொத்து எனக்கு எவ்வாறு கிடைத்து என்றால்அதை நான் சிவாநந்தம் என்பவரிடமிருந்து கிரையம் வாங்கினேன். அந்த கிரையப் பத்திரம் தான் வா.சா.ஆ.2 என்றால் சரிதான்.

2). நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு தாவா சொத்தை வில்லங்கம் பார்த்து அளவீடு செய்து தான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 தாவா சொத்தின் மூல ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2க்கு முன்பு தாவா சொத்துக்கான பத்திரம் எதுவும் இல்லை என்றால் சரிதான். நான் தாவா சொத்தினை கிரையம் வாங்கும்போது அது காலிமனை என்றால் சரிதான். தாவா சொத்தின் சர்வே எண்.762/2 என்றால் சரிதான். அதன் மொத்த விஸ்தீரணம் 50.66 செண்ட் என்றாலும் அதில் நான் 1-3/4 செண்ட் கிரையம் வாங்கினேன் என்றாலும் சரிதான்.

3). மேற்படி 1-3/4 செண்டில் நான்கு பக்க எல்லைகளை குறிப்பிட்டு நான் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ல் குறிப்பிட்டுள்ள ஜக்குபந்தி சரியானது தான் என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற ஆவணம் எந்த பிழையும் இல்லாத சரியான ஆவணம் என்றால் சரிதான். தாவா சொத்தினை கிரையம் பெற்ற பிறகு தான் அதில் மாடி வீடு கட்டி மின் இணைப்பு பெற்றேன் என்றால் சரிதான். அதனை தான் நான் 1வது வாதிக்கு கிரையம் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த பத்திரம் தான் வா.சா.ஆ.1 என்றால் சரிதான்.

4). வா.சா.ஆ.1ல் ஜக்குபந்தி கடை வீதிக்கு செல்லும் தார்ரோடுக்கு மேற்கு, வரதராஜன் வீட்டிற்கு தெற்கு, மாசிலாமணி ஆசிரியர் வீட்டுக்கு வடக்கு, வேலாயுதம் வீட்டிற்கு கிழக்கு என்று

கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வரதராஜன் இந்த வழக்கில் 1வது பிரதிவாதி என்றால் சரிதான். மேற்படி வரதராஜன் தான் நான் சாட்சியம் அளிப்பதற்கு என்னை அழைத்து வந்தார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் 2ம் பக்கத்தில் கையொப்பம் மேற்படி வரதராஜனின் கையொப்பம் என்றால் சரிதான். வரதராஜன் பத்திரத்தை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தார் என்றால் சரிதான்.

5). நான் 1வது வாதிக்கு கிரையம் கொடுத்த சொத்தினை அவர் அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். வாதி எத்தனை அட்டவணை சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல்செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் கிரையம் வாங்கின சொத்தினை மட்டும் தான் 1வது வாதிக்கு கிரையம் கொடுத்தேன். அதற்கு பின்பு உள்ளஇடத்தினை நான் அனுபவித்தது கிடையாது. 1வது வாதிக்கும் நான் கிரையம் கொடுக்கவில்லை. அதை வரதராஜன் தான் அனுபவித்து வந்தார். நான் சொல்வது தவறு என்றாலும் நான் 4 பக்கமும் ஜக்குபந்தியை காண்பித்து 1வது வாதிக்கு கிரையம் கொடுத்துவிட்டு தற்போது தாவா பி அட்டவணை சொத்தினை 1வது வாதிக்கு கிரையம் கொடுக்கவில்லை என்று 1வது பிரதிவாதிக்கு பவ்வியப்பட்டு தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் தாவா ஏ அட்டவணை சொத்துக்கு மேற்கு பக்கம் உள்ள தாவா பி அட்டவணை சொத்தினை 1வது வாதிக்கு கிரையம் கொடுக்கவில்லையென்றால் வா.சா.ஆ.1ல் உள்ள ஜக்குபந்தியை ஆட்சேபணை செய்து 1வது பிரதிவாதி கையொப்பம் செய்திருக்கமாட்டார் என்றால் சரியல்ல.

6). நான் தாவா சொத்துக்களை 1வது வாதிக்கு தகுந்த மறுபயன் பெற்றுக்கொண்டு கிரையம் கொடுத்துவிட்டு தற்போது கிரையம் கொடுக்கவில்லையென்று சாட்சியம் அளிப்பது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வில்லங்கம் இல்லை என்று கிரையம் கொடுத்துவிட்டு தற்போது அதில் உள்ள வில்லங்கத்தினை சரிசெய்து கொடுக்க நான் கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. வாதிக்கு கிரைய ஆவணம்மூலம் கிரையம் கொடுத்துவிட்டு தற்போது அந்த ஆவணத்திற்கு எதிராக நான் சாட்சியம் அளிக்க முடியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 1வது வாதிக்கு ஏற்பட்ட நட்டங்களுக்கு நான் தான் பொறுப்பு என்றால் சரியல்ல. நான் வாதிக்கு எதிராக தவறாக இந்த வழக்கில் எதிர்வியாஜ்ஜியம் செய்கிறேன் என்றால் சரியல்ல.

இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது

மறுவிசாரணை, இல்லை

Taken down by me in open read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-Tmt.V.Devapriya
DM Cum JM
Cheyyur (FAC)